STC.No. 273 /2024 நாள் : 11.09.2025

PW 1- திரு.மனோஜ்

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

1)நான் என்ன படித்துள்ளளேன் என்றால் B.Com மற்றும் CA, தமிழ் மற்றும் ஆங்கிலம் எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும்.வழக்கின் புகார்தாரர் வினோத் சாய் அசோசியேட்ஸ் நிறுவனத்தை எங்கு நடத்தி வருகிறார் என்ற முழுமையான முகவரியையும் என்ன தொழில் செய்கிறார் என்ற விவரத்தை குறிப்பிடவில்லை என்றால் முகவரி பல்லடம் என்று சொல்லியுள்ளேன் அவர் லோன் வாங்கி கொடுக்கும் தொழில் ெச்யது வருகிறார். அவர் லோன் வாங்கி கொடுக்கும் தொழில் செய்து வருகிறார் என்ற விவரத்திற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்பிக்கவில்லை என்றால் சரிதான்.

2) சாய் அசோசியேட்ஸ் நிறுவனம் பதிவு செய்யப்பட்ட நிறவனமா என்றால் தெரியாது. இந்த நிறுவனத்திற்காக வினோத் வருமான வரி கட்டுவது பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள சிறப்பு பவர் தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்றால் சரிதான்.இந்த ஆவணத்தில் 3 வது பக்கத்தில் முதல் பாராவில் நான்காவது வரி முழுமையாக பூர்த்தி செய்யப்படவில்லை என்றால் சரிதான். இந்தஆவணத்தில் எதிரிக்கும் புகார்தாரருக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக எனக்கு தெரியும் என்பது பற்றி ஆவணங்களில் குறிப்படவில்லை என்றால் சரிதான் ஆனால் எனக்கு தெரியும்.

3)இந்த ஆவணத்தின் 4 வது பக்கத்தில் இரண்டாவது சாட்சியின் பெயரோ அல்லது அவரது தகப்பனார் பெயரோ இல்லை என்றால் சரிதான். முத்திரைதாளில் 02.08.2024 ஆம் தேதி திருப்பூரில் வாங்கப்பட்டது என்றால் சரிதான். இந்த ஆவணத்தில் நான் மற்றும்

புகார்தாரர் மற்றும் சாட்சிகள் ஆவணத்தில் பல்லடத்தில் வைத்து 17.10.2024 ல் கையொப்பம் செய்தோமா என்றால் சரிதான். பவர் ஆப் அட்டார்னியில் 18.10.2024 என ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளதா என்றால் சரிதான்.இந்த ஆவணத்தை 22.10.2024 அன்று தான் நோட்டரி பன்னியுள்ளாம் என்றால் சரிதான் நான் நோட்டரி செய்ய செல்லவில்லை. அதனால் நோட்டரியின் எந்த புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது ஆவணத்திலும் இல்லை. நோட்டரியின் லெட்ஜரில் யார் சாட்சி கையொப்பம் செய்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 02.08.2024 கோவை சேர்ந்த புகார்தாரர் திருப்பூரில் முத்திரை தாள் வாங்கி அதில் 17.10.2024 அன்று புகார்தாரரும் சாட்சிகளும் நானும் கையொப்பம் செய்ததாக சொல்லி ஆவணத்தில் 18.10.2024 அன்று தயார் செய்ததாக சொல்லி அந்த ஆவணத்தை 22.10.2024 அன்று நோட்டரி செய்ததாக சொல்லப்பட்டதால் சட்டப்படி செல்லதக்க ஆவணம்மல்ல அதனால் செல்ல தக்க சாட்சி அல்ல என்றால் சரியல்ல.

4) எனக்கு வழக்கின் புகார்தாரர் வினோத்தை எத்தனை வருடமாக தெரியும் என்றால் 6 வருடமாக தெரியும். வினோத்தின் லோன் அசோசியேட்ஸில் வேலை செய்தேனா என்றால் இல்லை அவர் எனது நண்பர்.திருப்பூர் டிகேடி மில் பஸ் ஸ்டாப்பில் பைனாஸ் தொழில் செய்து வரும் சிவராஜ் குமாருக்கும் புகார்தார் வினோதுக்கும் என்ன பழக்கம் என்றால் சிவராஜ் குமார் எனது நண்பர் புகார்தாரருக்கும் சிவராஜ்குமாருக்கும் என்ன பழக்கம் என்று தெரியாது. இந்த வழககின் புகார்தாரர் மீது ம சிவராஜ்குமார் திருப்பூர் மாண்புமிகு குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் (விரைவு) காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்துள்ளார் அது STC 611/2025 நிலுவையில் உள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. ரூ2 இலட்சம் மேல் ஒருவர்பரிவர்த்தனை செய்தால் அதை வங்கி பரிவர்த்தனை மூலமாக

செய்ய வேண்டும் என்பது தெரியுமா என்றால் தெரியாது. எதிரிக்கு புகார்தாரர் ரூ 7 இலட்சம் ரொக்கமாக கொடுத்ததாக சொல்லப்படுவது குறிப்பிட்டு காரணங்களுடன் மனுவில் சொல்லவில்லை என்றால் இடம் வாங்க கொடுத்தாக சொல்லியுள்ளேன்.

5) எதிரிக்கு ரூ 7 இலட்சம் பணம் கொடுக்கவில்லை வழக்கிற்காக நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. கடந்த 19.04.2023 அன்று எதிரி புகார் தாரர் வினோத் மீதும் நண்பர் சிவராஜ்குமார் மீதும் செக்கியுரிடிக்காக சிவராஜ்குமாரிடம் கொடுத்த காசோலைகளை சட்டத்துக்கு புறம்பாக பயன்படுத்துவது குறித்து திருப்பூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்து அது வரிசை 24 ஆக பதிவு செய்யப்பட்டு பல்லடம் துணை காவல் கண்காணிப்பாளர் முன்னிலையில் எதிரி மற்றும் புகார் தாரர் வினோத் மற்றும் சிவராஜ்குமார் ஆகியோரை அழைத்து விசாரித்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. இந்த விசாரணைக்கு பின்னிட்டு தான் இந்த காசோலை மோசடி புகார் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி விவரங்கள் தெரியும் என்றாலும் வழக்கிற்காக தெரியாது என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. புகார்தாரர் வினோத்தின் போன் நம்பர் தெரியுமா என்றால் தெரியும். எதிரிக்கு பணம் கொடுத்திருந்தால் புகார்தாரர் போன் செய்து பணம் எப்போது தருவீர்கள் என்று கேட்டிருப்பார் என்றால் போன் செய்து இருப்பார் எனக்கு தெரியாது.

6) புகார் தாரருடைய கால் ஹிஸ்டரியை நீதிமன்றத்தில் தாக்கல்செய்ய எனக்கு எந்த ஆட்சேபனையும இ்லை என்றால் இல்லை . புகார்தாரர் வினோத் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க முடியுமா என்றால் முடியும். எதிரி திருப்பூர் டிகேடி மில் பஸ் ஸ்டாப்பில் பைனான்ஸ் தொழில் செய்து வரும் சிவராஜ் குமார் என்பவரிடம் வாங்கிய கடனுக்கு செக்கியுரிடிக்காக

கொடுத்த காசோலையை சிவராஜ் குமாரின் தூண்டுதலின் படி துர்லாபம் அடைய புகார்தாரர் மோசடியாக காசோலையை பூர்த்திசெய்து வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் புகார் தாரரை எதிரிக்கு யார் என்று தெரியாது என்றும் இது பொய் வழக்கு எதிரி விடுதலை செய்யப்பட வேண்டியவர் என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA Digitally signed by S SAPNA Date: 2025.09.11 18:31:16 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.